செ.வெ.எண். 266/2009(செமதொஅ) நாள் : 26.08.2009.

**<u>கலைஞர் காப்பீடு திட்டத்திற்கு ரூ.517 கோடியே 30 லட்சத்தை அரசே செலுத்துகிறது என மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் தெரிவித்தார்.</u>**

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், கோல்லச்சேரி சேக்கிழார் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீடு திட்ட துவக்க விழா நடைபேற்றது. இவ்விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு திட்டத்தினை துவக்கி வைத்து, பயனாளிகளுக்கு மருத்துவ காப்பீட்டு அடையாள அட்டைகளை வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆட்சிப்போறுப்பேற்ற பின்பு எண்ணற்ற திட்டங்களை உருவாக்கி அதனை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்தில் அளித்த அனைத்து வாக்குறுதிகளையும் சிறப்பாக நிறைவேற்றியுள்ளார். இன்று இங்கு துவங்குகின்ற உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான மருத்துவ காப்பீடுத்திட்டம் ஓர் அற்புதமான திட்டமாகும். இத்திட்டத்தின் நோக்கம் ஏழை எளிய மக்கள் பயன்பெறவேண்டும். அவர்களின் உயிர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுதான். பண வசதி படைத்தவர்கள் இருதய நோய் ஏற்பட்டால் பெரிய மருத்துவமனைகளுக்கு சென்று சுலபமாக சிகிச்சை பெற்று வீடு திரும்புவார்கள். ஆனால் ஏழை எளிய மக்கள் இதுபோன்ற நோய் வந்தால் பெரிதும் பாதிப்படைவார்கள். இந்த நிலையை மாற்றி ஏழை, எளிய மக்களுக்கு உயர் சிகிச்சை அளிக்கவும், அவர்களின் உயிர் பாதுகாக்கப்படவேண்டும் என்பதற்காகவும் இந்த திட்டத்தை கலைஞர் அவர்கள் உருவாக்கியுள்ளார். இதற்காக மருத்துவ காப்பீட்டு தொகைக்கு செலுத்த வேண்டிய தொகை முழுவதும் அரசே ஏற்றுக்கொள்கிறது. அதற்காக ரூ.517கோடியே 30லட்சம் அரசு செலவழிக்கிறது. இப்படிப்பட்ட உயர்ந்த திட்டத்தை கலைஞர் அவர்கள் தாயுள்ளத்தோடு செயல்படுத்தி ஏழை, எளிய மக்களை பாதுகாத்து வருகிறார். இந்த மருத்துவ காப்பீடுத்திட்டம் இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் செயல்படுத்தப்படவில்லை. தமிழகத்தில் மட்டும்தான் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த அரசு முதியோர் உதவித்தொகை. மகளிருக்கு திருமண உதவித்தொகை. கர்ப்பிணி ஏழை பெண்களுக்கு உதவித்தொகை போன்ற பெண்களை பாதுகாக்கின்ற சிறப்பான திட்டங்களை இந்த அரசு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. உண்மையிலேயே மக்களுக்காக பாடுபடுகின்ற ஒரே தலைவர் நமது முதலமைச்சர் கலைஞர் ஆவார். இதனை பொது மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். மக்களுக்காக பாடுபடுகிற ஒரே

அரசு கலைஞர் அரசு தான். இந்த அரசுக்கு என்றென்றும் நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். ” என்று கேட்டுக் கொண்டார்.

இந்த விழாவில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.ஆர். பாலு, மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.த. துரைசாமி. குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திரு.ஆ.மனோகரன் ஆகியோர் முன்னிலையுரையாற்றினர். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே. மிஸ்ரா,இ.ஆ.ப. அவர்கள் தலைமையுரையாற்றினார். முன்னதாக கொல்லச்சேரி ஊராட்சி மன்றத்தலைவர் திரு.சத்தியமூர்த்தி அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார். முடிவில் கொல்லச்சேரி ஊராட்சி மன்றத்துணைத்தலைவர் திருமதி தேவிமோதிலால் நன்றி கூறினார். விழாவில் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் திருமதி ரீட்டா செல்வசீமான், திரு. மு. ராகவன், ஒன்றியக்குழுத் துணைத் தலைவர் திருமதி சுஜாதாபாஸ்கரன், மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர்கள், அரசுத்துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



செய்தி வெளியிடுபவர்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்.
காஞ்சிபுரம்.